# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 9

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. மீண்டும் தொடங்கும் மிடுக்கு எனும் பாடலுடன் தொடர்புடைய தொழில்

அ) கடற்றொழில் ஆ) வணிகத்தொழில்
இ) நெசவுத்தொழில் ஈ) பயிர்த்தொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. அடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) நடந்துநடந்து ஆ) மேலேகீழே இ) கன்னங்கரிய ஈ) பளபள

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர் என்பதைக்காட்டும் ஈமத்தாழிகள் கிடைத்த இடம்

அ) பொலநறுவை ஆ) பொம்பரிப்பு இ) பூநகரி ஈ) திருகோணமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. இறந்தோரை அடக்கம் செய்ய பெருங்கற்களால் கல்லறைகள் கட்டப்பட்ட காலம்

அ) கற்காலம் ஆ) வரலாற்றுக்காலம் இ) பெருங்கற்காலம் ஈ) பிற்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பழம் + இல்லை = பழமில்லை. இப்புணர்ச்சி

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) தோன்றல் புணர்ச்சி
இ) கெடுதல் புணர்ச்சி ஈ) திரிதல் புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தாயின் தாலாட்டு என்ற பாடலில் காணப்படும் கதையைக் கூறும் இலக்கியம்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) புறநானூறு ஈ) அகநானூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. திரு + அடி இவற்றைப் புணர்த்தினால்

அ) திரடி ஆ) திரியடி இ) திருயடி ஈ) திருவடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. சிங்களவர் தங்களது வரலாறு என்று கூறும் பொய்யும் புளுகுமான நூல்.

அ) இரகுவம்சம் ஆ) மகாவம்சம் இ) மகாபாரதம் ஈ) மகாபுத்தம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. மகாவம்சம் சார்ந்த பௌத்தம்

அ) மகாயான　　ஆ) ஃகீனயான　　இ) பௌத்தவாதம்　　ஈ) தேரவாதம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

10. தரப்பட்டுள்ளவற்றில் இரட்டைக் கிளவி

அ) பொலபொல　　ஆ) நான்நீ　　இ) அக்கம்பக்கம்　　ஈ) வெள்ளைவெளேர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

11. உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை உருவாக்கியவர்

அ) தாவீது அடிகள்　　ஆ) இராயப்பு அடிகள்
இ) விபுலாநந்த அடிகள்　　ஈ) தனிநாயகம் அடிகள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

12. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்

அ) ஏழ்வகை　　ஆ) எண்வகை　　இ) அறுவகை　　ஈ) ஒரேவகை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

13. 'தேன்மொழியாள்' இதில் உவமானத்துக்கும் உவமேயத்துக்கும் இடையில் உள்ள பொதுத்தன்மை

அ) இனிமை　　ஆ) அன்பு　　இ) அழகு　　ஈ) இளமை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

14. நாராய்! நாராய்! செங்கால் நாராய்! என்ற பாடலைப் பாடியவர்

அ) புலவர் மோசிகீரன்　　ஆ) புலவர் பிசிராந்தையார்
இ) சத்திமுற்றப் புலவர்　　ஈ) புலவர் நக்கீரன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

15. படித்தார் படியாதார் அனைவருக்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல்

அ) வடசொல்　　ஆ) இயற்சொல்　　இ) திரிசொல்　　ஈ) திசைச்சொல்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

16. ஒரு செயல் செய்து முடிக்கப்படாமல் இருப்பதைக் காட்டும் இணைமொழி

அ) அரைகுறை　　ஆ) அரசல்புரசல்　　இ) மேடுபள்ளம்　　ஈ) வீண்வேலை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

17. யாழ்ப்பாண அரையத்தின் கடைசி மன்னன்

அ) பண்டாரவன்னியன் ஆ) காக்கைவன்னியன்
இ) எல்லாளன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நண்பன் போல் நடித்துக்கொண்டு எதிரிக்குக் காட்டிக் கொடுப்பவன்

அ) இருநாடகன் ஆ) இரண்டகன் இ) இருகுணன் ஈ) ஈரூடகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. இது எழில்நிலாவினுடைய மிதியுந்து. இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) நான்காவது ஆ) ஆறாவது இ) இரண்டாவது ஈ) எட்டாவது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி வைத்த ஆண்டு

அ) 1505 ஆ) 1605 இ) 1905 ஈ) 1765

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. அறிஞன் என்ற பெயர்ப் பகுசொல்லைப் பகுத்தால்

அ) அறி + ஞன் ஆ) அறி + ஞ் + அன்
இ) அறி + ஞ்ஞன் ஈ) அறிஞ் + அன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பிட்டுக்குக் கத்தரிக்காய்ப் பொரியல் சுவையாக இருக்கும். பொரியல் என்பது

அ) பொருளாகுபெயர் ஆ) காலவாகுபெயர்
இ) சினையாகுபெயர் ஈ) தொழிலாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. தரப்பட்டுள்ள சொற்களில் ஒன்று பொருந்தாது.

அ) மா ஆ) பலா இ) தென்னை ஈ) வாழை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. உவமையணிக்கு எடுத்துக்காட்டு

அ) தேன்தமிழ் ஆ) செந்தமிழ் இ) பைந்தமிழ் ஈ) தீந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தவளைக்குப் பேத்தை போல் சிங்கத்துக்கு

அ) குருளை ஆ) கன்று இ) குட்டி ஈ) பார்ப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்.
இவர் யார்?

அ) அயலார் ஆ) நண்பர் இ) புலவர் ஈ) உறவினர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதைக் குறிக்கும் பழமொழி

அ) நிறைகுடம் தளம்பாது
ஆ) அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
இ) அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிழ்தும்
ஈ) கடுகு சிறிது காரம் பெரிது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. **குறள்:-** அன்பிலார் எல்லாந் தமக்குரியர் ____________

என்பும் உரியர் பிறர்க்கு

கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) என்புடையார் ஆ) நண்புடையார்
இ) உண்மையுடையார் ஈ) அன்புடையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. மகாவம்சம் கொளுத்தப்படவேண்டும் என்று சொல்லிய சிங்களப் பேரறிஞர்

அ) ஈ.டபிள்யூ.அதிகாரம் ஆ) சிறிலால் கொடிகார

இ) மகாநாமதேரர் ஈ) சிறிசேன

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. தமிழ்நெடுங்கணக்கில் ஆய்தம் தவிர மீதி உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 30 ஆ) 247 இ) 246 ஈ) 217

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

### மீண்டும் தொடங்கும் மிடுக்கு

ஆண்டு முழுவதும் படாதபாடு பட்டு ஆழத்து நீருக்கு அகழ்ந்து, தன் உடலையும் பொருளையும் வழங்கிப் பயிர்செய்து, அறுவடை செய்யும் கடைசி வேளையில் சூறாவளியுடன் பெருமழை பொழிந்து வெள்ளம் போடுகிறது. பயிரெல்லாம் நீரில் மூழ்கி அழிவுற்றன. இந்தப் பெருங் கொடுமையால் எல்லாம் இழந்தும் மனம் இடியவில்லை தமிழீழத்து உழவன். ஓம்! அவன் மீண்டும் மிடுக்குடன் மண்வெட்டியோடு செல்கிறான் மீண்டும் விதைப்பதற்கு. இது தமிழீழத்தாரின் உயிரோடு பொருந்திய உளத்திறன். இத்தகைய உளத்திறனோடு தான் அன்று வன்னியை ஆண்ட பண்டாரவன்னியன் ஆங்கிலேயரைப் போரில் ஓடஓட விரட்டினான். சூழ்ச்சியால் பண்டாரவன்னியனை வென்ற தளபதி வொன்றிபேர்க் தன் பெருமையைப் பறைசாற்ற நினைவுக்கல் நாட்டினான். ஆயினும், வன்னியில் மீண்டும் வீரம் வளர்த்தனர் தமிழர். தன்னிகரில்லா வீரத்துடன் மீண்டும் தலை நிமிர்ந்தது தமிழினம். இதைப் பொறுக்காத எதிரிகள் நேர்மையற்ற வழிகளில் தமிழ் இனத்தை அழிக்கத் திட்டம் தீட்டினர். தமிழ் மக்களை அழித்தனர். ஆனாலும் தமிழர் வீரம் மீண்டும் மிடுக்கொடு எழும். ஆழ வேரோடி அறுகுபோல் படரும். இன்றில்லாவிட்டால் நாளை, நாளையின்றேல் நாளை மறுநாள், தமிழரது மிடுக்கு மீண்டும் தொடங்கும்.

1. மீண்டும் மண்வெட்டியுடன் எங்கே செல்கிறான் தமிழீழத்து உழவன்?

______________________________________________

______________________________________________

2. தமிழர் வீரத்தின் சான்றாக வன்னியில் இருப்பது என்ன?

______________________________________________

______________________________________________

3. எதிரிகள் என்ன திட்டம் தீட்டினர்?

______________________________________________

______________________________________________

4. எப்படி வேரோடி விடுதலைப் போர் தொடங்கும்?

5. ‘மீண்டும் தொடங்கும் மிடுக்கு’ என்பதனை விளக்குக?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா- ஏழில் ஐந்திற்கு முழுவிடை தருக.

1. இலங்கையின் தொல்குடிகள் யாவர்?

2. மகாவம்சம் ஒரு கட்டுக்கதை. சான்றுகளுடன் விளக்குக.

3. வாடை என்னும் காற்றைப் பற்றி விளக்குக.

4. கொலைத்தண்டனைக்கு உள்ளான சங்கிலி மன்னன் இறுதியாகக் கூறியவை எவை?

5. வீரத்தாய் தன் மகனைப் போருக்கு எவ்வாறு அனுப்பி வைத்தாள்?

6. திருக்குறளைப் பற்றி அல்பேர்ட சுவைட்சர் வெளிப்படுத்திய மிகச்சிறந்த கருத்து யாது?

_______________________________________________

_______________________________________________

7. தனிநாயகம் அடிகள் வெளியிட்ட இதழ்கள் எவை?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

வானோடும் உறவாடும் வன்னிக் காட்டில்
மானோடக் குயில்பாட மயில்களாடும்
தேனோடும் மட்டுநகர் வாவிதன்னில்
மீன்பாடும் மட்டுஉகளும் மருதமோங்கும்
அலைகரையில் அணைகோலும் முத்தும்நண்டும்
அலைமோதும் மலையருகில் மான்கள்மேயும்
அருள்மலியும் திருமலை அழகிலாடும்
மீன்கட்டும் அலைவரம்பில் தேங்கும்மன்னார்
கடலிலே விளைமுத்தம் கழனிகாணும்
சூழ்ந்தலைகள் தாலாட்டச் சுடருகின்ற
ஆழ்ந்தகழ்ந்த நீராலே உலகையூட்டும்
கனிவளமும் பனைவளமும் காணும்யாழில்
இல்லாத தொன்றில்லை இயற்கையோடு
இனியநறும் பயன்விளைய இறுமாந்ததமிழீழம்

1. வன்னிக்காட்டில் நடப்பது என்ன?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. கனிவளமும் பனைவளமும் நிறைந்த ஊர் எது?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. யாழ்ப்பாணம் எதன் மூலம் உலகை ஊட்டுகிறது?

4. மீன் பாடும் பட்டினம் எது?

5. தமிழீழம் எதனால் இறுமாப்பு அடைகிறது?

(புள்ளிகள் 10)

## 5) அனைத்து இலக்கண/மொழியியல் வினாக்களுக்கும் விடை தருக.

1. தெரிநிலைவினை, குறிப்புவினை என்பவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

2. இலக்கண வகையால் தமிழ்மொழியிலுள்ள பெயர்ச்சொற்கள் நால்வகை. அவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

3. தரப்பட்டுள்ள சொற்றொடர்கள் இடம்பெற, சொல்லியங்கள் எழுதுக.

பொலபொல: ______________________________

உயர்வு தாழ்வு: ______________________________

தன்னந்தனி: ______________________________

4. முதலாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பவற்றை விளக்குக.

______________________________

______________________________

______________________________

5. மலர் முகம் - இந்த உவமையணியை உவமானம், உவமேயம், பொதுத்தன்மை எனப் பிரித்தெழுதுக.

______________________________

______________________________

______________________________

(புள்ளிகள் 15)

6) பந்தியைத் தமிழ்மொழியில் மொழிமாற்றுக.

Freundschaft mit guten, gebildeten Menschen zu schließen ist sehr gut. Da sie ein gutes Wissen haben, tragen sie viel Liebe in ihrem Herzen. Der Umgang mit diesen Menschen fördert das Wissen. Wenn wir traurig sind, würden sie uns schnell beistehen. Indem sie unsere Trauer als ihre annehmen, trauern sie mit uns. Eine Freundschaft mit Menschen, die wenig Liebe in ihrem Herzen haben, bringt uns Trauer. Daher sollten wir, bevor wir eine Freundschaft mit jemandem schließen wollen, schauen, wie der Mensch ist um dann eine Freundschaft einzugehen.

Det er bedst at være venner med vise. På grund af deres visdom vil deres indre være fyldt med kærlighed. At tale og være sammen med dem vil give bred viden. I vores sørgelige tider vil sådanne mennesker hurtigt hjælpe. De vil sørge som om vores sorg er deres. Venskab med dem som ikke har kærlighed i deres indre vil føre til sorg. Hvis vi ønsker at blive venner med en, skal vi derfor først finde ud af hvilken person det er, inden vi vil blive venner med vedkommende.

It's good to be friends with good educated people. Because of their good knowledge, their heart will be full of love. Speaking and keeping company with them will improve our knowledge. When we are sad they will come and help us. They will consider our sadness as theirs own. Friendship with people who have no love will make us suffer. Therefore if we want to become friends with someone, we should find out about the personal quality of the person before making friendship.

Det er bra å være venner med gode og utdannede folk. Fordi deres gode kunnskaper fyller dem med godhet. Prate og være i deres nærvær vil øke våre kunnskaper. Når vi er triste vil de hjelpe oss. De vil bære på byrdene våres og anse dem som sine egne. Vennskap med mennesker uten godhet vil få oss til å lide. Hvis man vil bli venn med noen skal man derefor finne ut om personlige kvaliteter til personen før man blir venner.

(புள்ளிகள் 05)

Il est bon d'avoir une amitié avec des personnes cultivées. Grâce à leur bonne connaissance, leur coeur serait rempli d'amour. Leur parler, être en compagnie de leur volonté permettent d'améliorer nos connaissances. Lorsque nous sommes tristes, ils viendront nous aider, ils prendront en considération notre tristesse comme la leur. Une amitié avec des personnes qui n'ont pas de coeur n'a aucune utilité seulement nous faire souffrir. Par conséquent, si nous voudrions être ami avec quelqu'un, il faut connaître d'abord son caractère.

7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. சங்கிலி மன்னன்.
2. மகாவம்சம் வரலாற்று நூலல்ல.
3. நாளிதழ்ச் செய்திகளின்படி வன்னியில் இறுதிப்போர்.
4. கைய்ட்டி ( Hait) பூகம்பம். ஐசலாந்து ( Island) எரிமலைக் குமுறல். இவற்றுடன் இணைத்து உலகின் எதிர்காலம் பற்றிய உமது எண்ணங்களைத் தருக. (புள்ளிகள் 20)